**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.5/2024 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.1 |
| Name : | கரும்பாயிரம் |
| Father's Name/Husband Name: | தங்கவேல் |
| Village : | ஓலைப்பாடி |
| Taluk : | குன்னம் |
| Age : | 40/ 2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 09.02.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**
**(எதிரி – 2 தனவேல் ஆஜர் எதிரி 1 மற்றும் 4 ஆகியோர் ஆஜர் இல்லை அவர்களுக்காக கு.வி.ச. பிரிவு 317ன் கீழ் மனு அளிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது எதிரி 3 இறந்துவிட்டார் )**

**கு.வி.மு.ச பிரிவு 311 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு சாட்சியானவர் மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கபடுகிறார்**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. நான் எனது முதல் விசாரணையில் குறிய சங்கதிகளை தான் போலிசார் விசாரணையிலும் சொன்னேனா என்றால் ஆமாம். வழக்கு சம்பவம் எப்போது நடந்தது என்றால் 22 ம் தேதி 8 ஆம் மாதம் 2019 ஆம் வருடத்தில் மாலை 6.30 மணியளவில் வழக்கு சம்பவமானது எங்கள் கொள்ளைக்கு போகும் வழியில் நடந்தது. மேற்கண்ட சங்கதிகளைத்தான் நீதிமன்ற முதல் விசாரணையிலும் ,மருத்துவரிடமும் சொன்னேனா என்றால் ஆமாம். சம்பவம் குறித்து போலிசாரிடம் எப்போது தகவல் கொடுக்கப்பட்டது என்றால் அன்றைய தினமே இரவு 8 மணிக்கு. அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருக்கும் பொழுது எனது அண்ணன் போலிசாருக்கு தகவல் கொடுத்தார். போலிசார் எப்போது வந்தார்கள் என்றால் அன்று இரவே 8.30 மணிக்கு வந்தார்கள். வழக்கு சம்பந்தமாக போலிசார் எப்போது என்னை விசாரணை செய்தார்கள் என்றால் சம்பவத்திற்கு மறுநாள் 23 ம் தேதி விசாரணை செய்து என்னிடம்இரவு 8.30 மணிக்கு வாக்குமூலம் பெற்றார்கள். சம்பவ இடத்தில் யாரெல்லாம் இருந்தார்கள் என்றால் யாருமில்லை. சம்பவம் எனது கொள்ளையில் தான் நடந்தது. போலிசார் வரைபடத்தில் குறிப்பிட்டது போல் சம்பவம்

வாரியில் நடைபெறவில்லை என்றால் அது வாரியில்லை அதை பள்ளம் என்று தான் நாங்கள் சொல்லுவோம். அந்தப் பள்ளத்திற்குள் கட்டைகள், கல்லு, மண் ஆகியவை கிடக்கும் என்றால் சரிதான். சம்பவம் நடந்தவுடன்எத்தனை மணிக்கு எப்படி மருத்துவமனைக்கு நான் சென்றேன் என்றால் மாலை 7 ல் இருந்து 7.30 மணிக்கு ஆம்புலன்ஸ் மூலம் சென்றேன். மருத்துவரிடம் எத்தனை நபர்கள் என்னை அடித்தார்கள் என்று சொன்னேன் என்றால் 4 நபர்கள். எந்த ஆயுதத்தால் அடித்தார்கள் என்றால் கொடுவாள் வாங்கு என்ற ஆயுதத்தால் அடித்ததாக சொன்னேன். எத்தனை மணிக்கு அடித்ததாக மருத்துவரிடம் சொன்னேன் என்றால் மாலை 6.30 மணிக்கு அடித்ததாக சொன்னேன். நான் சொல்வதுபோல் எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வாங்கு, கொடுவாள், அரிவாள் இவை மூன்றும் வெவ்வேறு என்றால் சரிதான் ஆனால் எங்கள் ஊரில் வாங்கு கொடுவாள் என்று தான் சொல்வார்கள். குச்சி என்பதும் குச்சி கழி என்பதும் வெவ்வேறு என்றால் சரியல்ல எங்கள் ஊரில் குச்சி கழி என்று தான் சொல்வார்கள். வாங்கு அரிவாளின் நீளம் மற்றும் அகலம் குறித்து எனது முதல் விசாரணையில் சொன்னேனா என்றால் தெரியவில்லை. போலிசார் விசாரணையிலும் எனது புகார் வாக்குமூலத்திலும் வாங்கு அரிவாளின் நீளம் மற்றும் அகலம் குறித்து சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மேற்கண்ட சங்கதி எனது புகார் வாக்குமூலத்தில் இல்லை என்றால் அந்த புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது என்றால் சரியல்ல, நான் கொடுத்த புகார் வாக்குமூலம் தான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் நானும் எனது அண்ணன் முருகனும் மற்றும் எனது அண்ணன் மனைவி ஆகியோரும் சேர்ந்து 2ம் எதிரி தனவேல் 4ம் எதிரி பாப்பா அவர்களை காட்டில் வைத்து அடித்து முள் வேலியை பிடிங்கி போட்டு பெட்ரோல் ஊற்றி தீ வைக்க போகும் போது மேற்கண்ட எதிரிகள் இருவரும் எங்களை தடுத்த போது நாங்கள் அவர்களை குச்சியால் முதுகில் இடுப்பில் அடித்தபோது எதிரிகள் வலி தாங்கமால் கத்திய போது அருகில் உள்ளவர்கள் சத்தம் கேட்டு வருவதைப் பார்த்து நான் தப்பித்து ஓடிய போது வாரியில் தடுக்கி கீழே விழுந்ததால் எனது தலையில் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேற்கண்ட சம்பவம் குறித்து 4ம் எதரி பாப்பா குன்னம் காவல் நிலையத்தில் எங்களுக்கு எதிராக புகார் கொடுத்து அதன் பெயரில் குற்ற எண்.219/2019 இ.த.ச. பிரிவு 294(b),323,324,506(2) and Section 4 of Women Harassment Actன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு அந்த வழக்கு C.C No.418/2019 என்ற வழக்கில் இந்த நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxx
Judicial Magistrate
Additional Mahila Court,
Perambalur.